**நீதித்துறை நடுவர் எண்.1, நீதிமன்றம்**
**திண்டுக்கல்.**

முன்னிலை : திரு.எஸ்.பாக்கியராஜ், பி.எஸ்.ஸி., பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.1,
2026-ம் ஆண்டு ஜீன் 03 -ம் நாள் புதன்கிழமை
STC. No.3023/2025
CNR.No.TNDG03-008689-2025
கு.வி.மு.ச. பிரிவு 255-ன் கீழ் தீர்ப்புரை

| | | |
|---|---|---|
| **1.** | **வழக்கின் வரிசை எண்** | **STC. No.3023/2025** |
| **2.** | **குற்றம் நடந்த தேதி** | **29.10.2025** தேதியிட்ட கேட்பறிவிப்பு கிடைக்கப் பெற்றதிலிருந்து 15 நாட்கள் கழித்து, 16 வது நாள் |
| **3.** | **புகார்தாரரின் பெயர் மற்றும் முகவரி** | திரு.பாலுச்சாமி,<br>த/பெ. ரெங்கசாமி,<br>கதவு எண். M1/135, R.M.காலனி,<br>12 வது கிராஸ்,<br>திண்டுக்கல் டவுன்,<br>திண்டுக்கல் மாவட்டம். |
| **4.** | **எதிரியின் பெயர் மற்றும் முகவரி** | திரு. R. பாண்டி,<br>த/பெ. ரத்தினம் பிள்ளை,<br>கதவு எண். 3/25, வெள்ளாளர் தெரு, அய்யம்பாளையம்,<br>அய்யம்பாளையம் கிராமம், ஆத்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம் |
| **5.** | **குற்றச்சாட்டின் விவரம்** | எதிரி, மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142 -ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக |
| **6.** | **எதிரியின் வாதுரை** | பொய் வழக்கு, குற்றவாளி இல்லை |
| **7.** | **<u>தீர்ப்பின் முடிவு</u> –** எதிரி மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு | |

| | | |
|---|---|---|
| | 138–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி இல்லை என முடிவு செய்யப்படுகிறது. | |
| **8.** | **தீர்ப்பு பகரப்பட்ட தேதி** | 03.06.2026 |
| **9.** | **தீர்வுக்கான காரணங்கள் சுருக்கமான உரை –**<br>**முடிவாக,** எதிரி தரப்பில் ஒரு நிகழ்தற்தக்க எதிர்வழக்கை முன்னிறுத்தி **(Preponderance of Probabilities)** நிலைநாட்டியுள்ளார். இதன்மூலம் அவர் சட்டப்பூர்வ அனுமானங்களை முறியடித்து விட்டதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே எதிரி மீது சுமத்தப்பட்ட நிரூபிக்கும் சுமையை அவர் விடுவித்துக் கொண்டதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. | |

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No. 814/2020 RG/F1 (P.Dis.No.36/2021) உத்தரவின்படி CASE SUMMARY கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

| **S.No.** | **CASE SUMMARY** | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | **The Period of remand of the accused** | : | **Name of the Accused** | **Date of Remand** | **Release on** |
| | | | திரு. R. பாண்டி,<br>த/பெ. ரத்தினம் பிள்ளை,<br>கதவு எண். 3/25,<br>வெள்ளாளர் தெரு,<br>அய்யம்பாளையம்,<br>அய்யம்பாளையம் கிராமம்,<br>ஆத்துார் தாலுகா,<br>திண்டுக்கல் மாவட்டம் | – | – |
| (ii) | **The date of filing of the complaint/final report in the Court** | : | **Filing of Complaint** | **Filing of Final Report** | |
| | | | **25.11.2025** | **-** | |
| (iii) | **The date of committal of the case to the Court of Session** | : | Not applicable | | |

<table>
<tr><td rowspan="1">(iv)</td><td>The date of questioning of the accused U/Sec.228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case maybe</td><td>:</td><td colspan="4">09.02.2026</td></tr>
<tr><td rowspan="2">(v)</td><td rowspan="2">Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions U/Sec 317 of the Code</td><td rowspan="2">:</td><td colspan="2">Crl.M.P.No.</td><td>Date of Filing</td><td>Result</td></tr>
<tr><td colspan="2">-</td><td>-</td><td>-</td></tr>
<tr><td rowspan="2">(vi)</td><td rowspan="2">Date of examination in-chief and cross-examination of a witness</td><td rowspan="2">:</td><td colspan="2">Name of the Examination</td><td>Date of Chief</td><td>Date of Cross</td></tr>
<tr><td>PW1</td><td>பாலுச்சாமி</td><td>09.02.2026</td><td>03.06.2026</td></tr>
<tr><td>(vii)</td><td>Date of examination of the accused U/Sec 313 of the Code</td><td>:</td><td colspan="4">-</td></tr>
<tr><td>(viii)</td><td>Details of abscondence of an accused and his appearance/productionas the case may be; and</td><td>:</td><td colspan="4">Nil</td></tr>
<tr><td>(ix)</td><td>Grant of stay by superior Courts and</td><td>:</td><td colspan="2">Sessions Court CMP Numbers</td><td>High Court No and Date of Stay</td><td>Result</td></tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **the results thereof** | | - | - | - |

இத்தனி நபர் புகார் 25.11.2025 ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு, இறுதியாக 12.05.2026 ஆம் தேதியன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தது. புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் **திரு. P.தண்டபாணி** அவர்கள் ஆஜராகி வாதுரைத்தார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் **திரு.S.அருள் ஆரோக்கியதாஸ்** அவர்கள் ஆஜராகி வாதுரைத்தார். இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்ததுமான இவ்வழக்கில் வழக்காவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

**1. இவ்வழக்கின் எதிரி** மாற்றுமுறையாவணங்கள் சட்டம் 1881–ன் பிரிவுகள் 138 மற்றும் 142–ன் கீழான குற்றம் புரிந்துள்ளார் எனவும், எதிரிக்கு உரிய தண்டனை வழங்கி, புகார்தாரருக்கு உரிய இழப்பீடு வேண்டியும் புகார்தாரரால் புகார்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. புகார்தாரர் வழக்கின் சுருக்கம் :**

**திரு. பாலுச்சாமி இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார்.** புகார்தாரருக்கு செலுத்த வேண்டிய தொகையை திருப்பி செலுத்தும் பொருட்டு, எதிரி, **15.10.2025 தேதியிட்ட காசோலை எண். 217376 தொகை ரூ.70,000/– க்கு " திண்டுக்கல் மத்திய கூட்டுறவு வங்கி லிட்., பட்டிவீரன்பட்டி "** கிளைக்கான காசோலை கொடுத்துள்ளார். மேற்படி புகார்தாரர் அவரது வங்கியான " **Indian Bank நேருஜி நகர்** " கிளையில்

தாக்கல் செய்துள்ளார். மேற்படி காசோலையானது **" Funds Insufficient "** என்ற காரணம் குறிப்பிட்டு 17.10.2025 ம் தேதியிட்டு திருப்பப்பட்டுள்ளது. இது குறித்து புகார்தாரர் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பை **28.10.2025** அன்று அனுப்பியுள்ளார். எதிரி, வழக்கறிஞர் அறிவிப்பை **29.10.2025** ம் தேதி பெற்றுக் கொண்டுள்ளார். மேற்படி கேட்பு அறிவிப்பு பெற்ற 15 நாட்களுக்குள் எதிரி காசோலைக்குண்டான தொகையை செலுத்தவில்லை. எனவே எதிரி காசோலை மோசடி குற்றம் புரிந்துள்ளதாகவும், எதிரி மீது மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 மற்றும் 142 ன் படி நடவடிக்கை எடுத்து இழப்பீடு பெற்றுத்தரக் கோரி புகார்தாரரால் இப்புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **இவ்வழக்கில்** எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் எதிரிக்கு எதிரான குற்றசாட்டின் சாராம்சத்தினை கு.வி.மு.ச.பிரிவு 251 ன்படி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்துரைத்தார். எனவே வழக்கு புகார்தாரர் தரப்பு சாட்சிய விசாரணைக்கு என வகை செய்யப்பட்டது.

4. **புகார்தாரர் தரப்பு சாட்சிய விவரம் :**

எதிரி குற்றத்தை மறுத்துரைத்ததால் எதிரி மீதான குற்றத்தை நிரூபணம் செய்யும் பொருட்டு, புகார்தாரர் தரப்பில் புகார்தாரர் **திரு. பாலுச்சாமி** என்பவர் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர்மூலம் **பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.4** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | 15.10.2025 ம் தேதியிட்ட புகார்தாரருக்கு எதிரி வழங்கிய காசோலை (காசோலை எண். 217376) | .. பு.சா.ஆ.1 .. ஆகவும் |
| 2. | 17.10.2025 தேதியிட்ட காசோலை மதிப்பு மறுக்கப்பட்டு திருப்பப்பட்டது | .. பு.சா.ஆ.2 .. ஆகவும் |
| 3. | 28.10.2025 தேதியிட்டு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்வு | .. பு.சா.ஆ.3 .. ஆகவும் |
| 4. | 29.10.2025 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை | .. பு.சா.ஆ.4 .. ஆகவும் |

குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், எதிரி தரப்பில் பு.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். இத்துடன் புகார்தாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

5. **புகார்தாரர் தரப்பு** சாட்சியம் முடிக்கப்பட்டவுடன், புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாகத் தோன்றுகிற சாட்சிய விவரங்களை எதிரிக்கு எடுத்துக்கூறி, அது குறித்து எதிரி நேர்முகமாக விளக்குவதற்கு வாய்ப்பளிக்கும் பொருட்டு, கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ) –ன் படி எதிரிக்கு வாய்ப்பளிக்கப்பட்டும், எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)–ன் கீழான விசாரணை நடவடிக்கைகள் இந்நீதிமன்றத்தால் விலக்களிக்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

6. **இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

1) எதிரி மீதான மாற்றுமுறையாவணங்கள் சட்டம் 1881 பிரிவு 138 மற்றும் 142 ன் கீழான குற்றம் புகார்தாரர் தரப்பில் சந்தேகத்தின் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?

2) எதிரி ஒரு நிகழ்தற்தக்க எதிர் வழக்கை முன்னிறுத்தி அதை நிலைநாட்டி சட்டப்பூர்வ அனுமானங்களை முறியடித்து தன் மீதான நிரூபிக்கும் சுமையை விடுவித்துக் கொண்டனரா? என்பதுவேயாகும்.

**7. புகாரர்தாரர் தரப்பில்** எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்று பரிசீலனை செய்து பார்க்கப்பட்டது. இவ்வழக்கில் புகார்தாரர் தரப்பில் திரு. பாலுச்சாமி பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். புகார்தாரர் பு.சா.1 திரு. பாலுச்சாமி தனது முதல் விசாரணை சாட்சியத்தில் புகார்தாரருக்கு செலுத்த வேண்டிய தொகையை திருப்பி செலுத்தும் பொருட்டு, எதிரி, **15.10.2025 தேதியிட்ட காசோலை எண். 217376 தொகை ரூ.70,000/- க்கு " திண்டுக்கல் மத்திய கூட்டுறவு வங்கி லிட்., பட்டிவீரன்பட்டி "** கிளைக்கான காசோலை கொடுத்துள்ளார். மேற்படி புகார்தாரர் அவரது வங்கியான **" Indian Bank நேருஜி நகர் "** கிளையில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி காசோலையானது **" Funds Insufficient "** என்ற காரணம் குறிப்பிட்டு 17.10.2025 ம் தேதியிட்டு திருப்பப்பட்டுள்ளது. இது குறித்து புகார்தாரர் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பை **28.10.2025** அன்று அனுப்பியுள்ளார். எதிரி, வழக்கறிஞர் அறிவிப்பை **29.10.2025** ம் தேதி பெற்றுக் கொண்டுள்ளார். மேற்படி கேட்பு அறிவிப்பு பெற்ற 15 நாட்களுக்குள் எதிரி காசோலைக்குண்டான தொகையை செலுத்தவில்லை என சாட்சியம் அளித்துள்ளார். வழக்கு மூலமானது உரிய கால அவகாசத்திற்குள் ஏற்பட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக காணமுடிகிறது. எனவே

மாற்றுமுறையாவணச் சட்ட அனுமானம் புகார்தாரருக்கு ஆதரவாக அமைந்துள்ளது.

8. **எதிரி** மாறான நிரூபணத்தின் மூலம் புகார்தாரரின் வழக்கை உரிய சாட்சியம் மற்றும் சான்றாவணத்தின் மூலம் முறியடித்துள்ளனரா? என்று பார்க்கையில், எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவுகள் 251ன் கீழான விசாரணையின் போது **"பொய்வழக்கு "** என எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. மேலும் எதிரி தரப்பில் போதிய கால அவகாசம் கொடுத்தும் புகார்தாரர் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

9. **எதிரி தரப்பில்** முன்னிறுத்தப்பட்ட எதிர் வாதங்களை நிரூபணம் செய்யும் பொருட்டு மற்றும் புகார்தாரர் தரப்பு அனுமானங்களை முறியடிக்க வேண்டி எதிரி தரப்பில் பு.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். பு.சா.1 தனது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் "**எதிரி வழக்கு காசோலை தொகையை செலுத்திவிட்டார் என்றால் சரிதான். நான் வழக்கை மேற்கொண்டு நடத்த விருப்பப்படவில்லை. வழக்கிலிருந்து எதிரியை விடுவிப்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை"** என குறிப்பிட்டுள்ளார். மேற்படி பு.சா.1 ன் குறுக்கு விசாரணையில் பரிசீலனை செய்து பார்க்கையில் எதிரி தரப்பில் காசோலைக்குண்டான தொகை செலுத்தப்பட்டு அதுவும் புகார்தாரர் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதை காணமுடிகிறது. எதிரி தரப்பில் காசோலைக்குண்டான தொகை செலுத்தப்பட்டு புகார்தாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில்

எதிரிக்கு தண்டனை வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10. முடிவாக,** எதிரி மீதான மாற்று முறையாவணங்கள் சட்டம் 1881 சட்டப்பிரிவு 138 மற்றும் 142 ன் கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரிகள் மாற்றுமுறையாவணங்கள் சட்டம், 1881 சட்டப்பிரிவு 138 மற்றும் 142 ன் கீழான குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்து கு.வி.மு.ச பிரிவு 255(1)ன் படி உத்தரவிடப்படுகிறது. எதிரி மற்றும் அவரது பிணையதாரர்கள் பிணைப்பத்திரம் ஏதேனும் எழுதிக்கொடுத்திருந்தால் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

என்னால் சொல்லப்பட்டதை சுருக்கெழுத்தரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு **2026 –ம் ஆண்டு ஜீன் மாதம் 03 ம் நாள்** திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.06.03 16:34:47 +0530

நீதித்துறை நடுவர் எண். 1
திண்டுக்கல்.

**<u>பின் இணைப்பு</u>**

**<u>1. புகார்தாரர் தரப்பு சாட்சி</u>**

1. பு.சா.1 – திரு. பாலுச்சாமி

**2. புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| **1.** | **பு.சா.ஆ.1..** | 15.10.2025 ம் தேதியிட்ட புகார்தாரருக்கு எதிரி வழங்கிய காசோலை (காசோலை எண். 217376) |
| **2.** | **பு.சா.ஆ.2 ..** | 17.10.2025 தேதியிட்ட காசோலை மதிப்பு மறுக்கப்பட்டு திருப்பப்பட்டது |
| **3.** | **பு.சா.ஆ.3 ..** | 28.10.2025 தேதியிட்டு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்வு |
| **4.** | **பு.சா.ஆ.4 ..** | 29.10.2025 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை |

**3. எதிரி தரப்பு சாட்சி – இல்லை**

**4. எதிரி தரப்பு சான்றாவணங்கள் –இல்லை**

PACKIARAJ
Digitally signed by PACKIARAJ
Date: 2026.06.03 16:34:54 +0530

நீதித்துறை நடுவர் எண். 1
திண்டுக்கல்.